UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)
ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19 - 4 Oct - Dec 2025
Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சி. எம். முத்துவின் படைப்புகளில் வறுமை நிலை

**க. கௌசல்யா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் வை. கார்த்திக்**
தமிழியல் துறை, உதவிப் பேராசிரியர், நெறியாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்

**ஆய்வுச் சுருக்கம்**

பசியின் தாளமாட்டாத கொடுமையில் பச்சிளம் குழந்தை பாலுக்கழுது அழுது கதறும் துடிப்பை கண்கொண்டு காணச் சகிக்கவியலாத வறுமையைப் பற்றி ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார். வறுமையால் மருத்துவம் செய்யக்கூட காசு இல்லாமல் வழியற்று உயிர்க்காவு போவதைப் பற்றியும் வாங்கிய கடனுக்காக அவமானப்படும் நிலையினையும் காட்சிப்படுத்துகிறார். இப்படிப்பட்ட வறுமையான நிலையில் தன்னுடைய பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாமல் ஒரு பையனைப் பன்றி மேய்க்கவும், இன்னொரு பையனை மதிய உணவு சாப்பிடுவதற்காகவே பள்ளிக்கு அனுப்புவதாகக் காட்டுகிறார். இருப்பதற்குக் கூட சரியான வீடு இல்லாமல் வறுமையில் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இக்கட்டுரையின் நோக்கமாகும். சி.எம். முத்துவின் தேர்ந்தெடுத்த சிறுகதைகள் கோடை, இனிக்கும் வாழ்வு, மழை, அம்மன்தேர், மண்டையன்.

**முன்னுரை**

வறுமை என்பது ஒரு நபர் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளிலிருந்து பின்தங்கிய சூழ்நிலையைக் குறிக்கிறது. கூடுதலாக அந்த நபருக்கு உணவு, தங்குமிடம் மற்றும் உடைகள் போதுமான அளவு கிடைப்பதில்லை. இந்தியாவில் வறுமையால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்களால் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவுக்கு கூட பணம் செலுத்த முடியாது. மேலும் அவர்கள் சாலையோரங்களில் தூங்குகிறார்கள். அழுக்குப் படிந்த பழைய ஆடைகளை அணிக்கிறார்கள். கூடுதலாக அவர்களுக்கு சரியான ஆரோக்கியமான மற்றும் சத்தான உணவு, மருந்து வேறு எந்தத் தேவையான பொருளும் கிடைப்பதில்லை என்பதை விளக்கிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வறுமை பற்றிய விளக்கம்**

மக்களின் வருவாய் குறைவை வறுமை எனவும் அவர்தம் வாழ்க்கைக்கு வேண்டிய அவசியப் பொருட்களின் பற்றாக்குறையை வறுமை எனவும் பொருளியலார் இருவிதமாக வரையறுத்துக் கூறுகின்ற நிலையைக் காணமுடிகின்றது. ஹெர்மன் பி. மில்லர் (Herman P. Miller) என்னும் ஆங்கில அறிஞர் (The New Dictionary of Thoughts, p. 122).

“வருவாயின் கடைப்பட்ட குடும்பத்தினரை வறியவர்”

எனக் கூறுகிறார் ப்ரூபெயரே என்பர். (New Difinition of Our Poor, p. 70)

“வருவாய்க்குள் அடங்காத செலவினை உடைய மனிதன் வறியவன் எனப்படுகின்றான்” எனக் கூறுகிறார். ஒவ்வொரு நாடும் வறுமைக்கோட்டை குறிக்கும் குறைந்த அளவு வருவாயை நிர்ணயம் செய்து வைத்திருக்கின்றன.

“ஒருநாட்டின் பொருளியலின் இருமுனையாக விளங்கும் வறுமையும் வளமையும் காணத் தக்கன என்பதும் அவ்விரண்டுக்கும் காரணமாக இயற்கைச் சிறப்புகளும் செயற்கைச் சிறுமைகளும் சிந்திக்கத்தக்கன என்பதும்” (டாக்டர் ந. சஞ்சீவி, ப. 26)

வறுமை என்பதற்குத் தரித்திரம் (Poverty), வெறுமை (Emptiness), தகுதியற்ற தன்மை (Helpness Loneliness) என அகராதிகள் பலவும் பொதுப் பொருளாகச் சுட்டுகின்றன.

**வறுமையின் தன்மை**

பசி வந்துவிட்டால் பத்துக் குணங்கள் மனிதனுக்கு இல்லாமல் போய்விடுகின்றன. இதை நல்வழி என்னும் நூல் காட்டியுள்ளது.

**மானங் கல்வி குலம் வண்மை அறிவுடைமை**

**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை, தேனின்**

**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**

**பசிவந் திடப்பறந்து போம்**

(சோமசுந்தரனார், நல்வழி, பா. 17, ப. 53)

பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் என்ற பழமொழி இதனை நினைவுப்படுத்துவதாகும்.

பசியின் தன்மையை ஆராய்ந்துள்ள டாக்டர் அன்சேல் கீஸ் என்பவர்,

“பசியினால் இதயம் சுருங்கி அதன் துடிப்பும் குறைந்து மனத்தாலும் உடலாலும் பணிசெய்யக்கூடிய ஆற்றலும் குறையும் எனவும் பசியால் வாடுபவர் கோடையிலும் குளிரை உணர்பவராக இருப்பர்” (Ancelkeys Battle of Hanger poverty and Wealth in Americal, p. 129) என்று கூறியுள்ளார்.

**வறுமையைப் பற்றி வள்ளுவர் கூறுவன**

வறுமையின் கொடுமையை விவரிக்க ‘நல்குரவு’ என்ற முழு அதிகாரத்தையே இயற்றியுள்ளார் திருவள்ளுவர். இந்த அதிகாரத்தின் முதல் குறளில் ஒருவரின் வாழ்வில் கொடியது வறுமைதான் என்று விவரிக்கின்றார்.

**இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**

**இன்மையே இன்னா தது** (திருக்குறள். 210)

என்றும்,

**நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரம்பினுள்**

**யாதொன்றும் கண்பாடு அரிது** (குறள். 211)

என்றும் குறிப்பிடுகின்றார்.

தீயைத் தீண்டினால் சுடும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. தீயினால் வரும் வலியை விடக் கொடுமையானது வயிற்றில் உண்டாகும் பசி, நெருப்பை விட அதிகம் சுடக்கூடியது என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**தனிப்பாடல்**

உலகம் எவ்வளவோ முன்னேறினாலும் வறுமை மாறாமல் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது என்று ஔவையார் கூறுகிறார்.

**கொடிது கொடிது வறுமை கொடிது**

**அதனினும் கொடிது இளமையில் வறுமை**

(சோமசுந்தரனார், தனிப்பாடல், பா. 55,ப. 70)

என ஔவையார் வறுமையின் நிலைப்பாட்டைப் புலப்படுத்துகிறார்.

**பாரதியார் கவிதைகளில் வறுமை**

வறுமையின் நிலையை பாரதியார் தனது கவிதை மூலமாக வெளிப்படுத்துகிறார்.

**பஞ்சமோ பஞ்சம் என்றே நிதம்**

**பரிதவித்தே உயிர் துடிதுடித்து**

**துஞ்சி மடிகின்றாரே - இவர்**

**துயர்வைத் தீர்க்கவோர் வழியிலையே**

(பாரதியார் கவிதை, பா. 15, ப. 32)

**பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகளில் வறுமை**

ஏழ்மையின் வலியினை நமது கண் முன்னே காட்சிப்படுத்துகிறார் இந்தப் பாடலின்

வாயிலாக.

**கந்தை அணிந்தோம் - இரு**

**கையே விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்**

**மொந்தையிற் கூழைப் – பலர்**

**மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்**
பாரதிதாசன் கவிதை தொகுதி-1, பா. 53, ப. 60)

நெருப்பில் கூட கண்மூடி தூங்கி விடலாம் ஆனால் வறுமை வசப்பட்டவன் தூங்கவே முடியாது.

இக்கதையின் ஆசிரியரான சி.எம். முத்து அவர்கள் வறுமை நிலையில் இருந்து வந்தவர். இவர் ஒரு விவசாயக் குடும்பத்தை சேர்ந்தவர். இவருடைய கதைகளில் எல்லாம் வறுமை நிலையை அதிகமாகக் காண முடிகிறது. வறுமையினால் பசியின் தாளமாட் டாத கொடுமையில் பச்சிளம் குழந்தை பாலுக்கழுது கதறும் நிலை, மருத்துவம் செய்ய இயலாமல் உயிர்காவு போகும் நிலை ஆகியவை இப்படைப்பாளர் கோடை, இனிக்கும் வாழ்வு மழை, அம்மன்தேர், மானங்காப்பான் மகன் ஆகிய சிறுகதை வாயிலாக எடுத்துக் காட்டுகிறார்.

**கோடை**

கிருஷ்ணமூர்த்தி என்பவர் ஒரு தனியார் நிறுவனத்தில் அட்டெண்டர் வேலை செய்து வருகிறது. இவர் வேளைக்குச் சென்று கொண்டு வரும் சம்பளத்தை வைத்துதான் வீட்டில் உள்ள குழந்தைகள் மனைவியை காப்பாற்ற வேண்டும். மனைவி உடல்நலம் மிகவும் சரியில்லாமல் கோரைப்பாயில் படுத்துக்கிடந்தாள். இவள் உடல்நிலை சரியில்லாமல் படுத்தப் படுக்கையில் இருந்தநாள் முதல் இந்தக் குழந்தை தாய்ப்பாலின் ருசியை அறியாமலே பசும் பாலை குடித்து இந்த ஜீவனை காப்பாற்றி கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் மனைவியின் மருத்துவ செலவினைப் பார்ப்பதா, இன்னொரு பக்கம் குழந்தையின் பசிக்காக பார்ப்பதா என்று தவித்து கொண்டிருக்கி றான். எங்கு கடன் கேட்டும் கிடைக்காத நிலையில் நோயும் அதிகமாகிக் கொண்டே போனதால் மனஉளைச்சலுக்கு ஆளாகிறான்.

**பிரபா ஒருநாள் எல்லோருக்கும் டாடா காட்டிவிட்டு போய்விட்டாள்**

(சி.எம். முத்துவின் தேர்ந்தெடுத்த சிறுகதை, பா. 221)

இவள் இறந்ததற்கு வறுமையே மிக முக்கியமான காரணம். வறுமையால் சாப்பாட்டிற்கே வழி இல்லாத போது எங்கிருந்து உடல்நலம் பாதிக்கப்பட்டவரைக் காப்பாற்ற முடியும் என்பதை இக்கதை கூறுகிறது.

**இனிக்கும் வாழ்வு**

துரைசாமி என்பவர் வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பாக உட்கார்ந்து கொண்டு ஏழைப்பட்டாளங்கள், படிக்காதவர் களுக்கு மனு எழுதிக்கொடுத்து அதில் வருகின்ற வருமனாத்தில் குடும்பத்தை நடத்தி வந்தார். கொஞ்சநாளாக வட்டாச்சியர் அலுவலகத்திற்கு யாரும் வராததால் வேளைக்குச் செல்ல இயலவில்லை. குழந்தை களுக்குப் பால் வாங்கக் கூட காசு இல்லை. மனைவியோ கடுமையான பசியால் அவதிப் பட்டுக் கொண்டு இருக்கிறாள். குழந்தையும் பசியால் கதறிக்கொண்டு இருக்கிறது.

**மழை**

விவசாயம் பார்க்காமல் வீட்டில் சரியான வருமானம் இல்லாமலும் வறுமையில் சாப்பாட்டிற்கே வழி இல்லாத நிலைமையில் வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகின்றனர். இந்த ஊரில் மழைதண்ணி இல்லாமல் இந்த ஊரே வேலை இல்லாமல் இருந்தது. இப்படி மழையில்லாமல் விவசாயம் பண்ண முடியாமல் வறுமையால் இதனை நினைத்து நினைத்து நோய்வாய்ப் பட்டு படுத்த படுக்கையாய் ஆகிவிட்டான். இந்த நிலையில் படுத்த படுக்கையில் இருக்கும் கணவனைச் சரியாகக் கவனித்து கொள்ள முடியவில்லை. பசியின் கொடுமை யாலும் நோயின் அவஸ்தையாலும் எப்போது தூங்கினோம் என்று கூட தெரியாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர் என்பதை இக்கதை யின் வாயிலாக அறியமுடிகிறது.

**அம்மன் தேர்**

சாப்பாட்டிற்கே வழி இல்லாத நிலையிலும் அந்த ஊரின் வழக்கம் கோயில் பணத்தை எப்படியாவது வசூல் செய்ய வேண்டும் என்பது ஊர் முக்கியஸ்தாரர்களின் வேலை. இந்த நிலையில் நாகப்பிள்ளை போகாத இடமில்லை. கேட்காத ஆளில்லை, யார் யார் காலில் விழுந்து கேட்க வேண்டுமோ எல்லோரின் கால்களிலும் விழுந்து கேட்டு விட்டேன். யாரும் பணம் கொடுக்கவில்லை.

அம்மன் தேர் நாகப்பிள்ளை வீட்டில் எதிரே நிறுத்தப்பட்டது. இதனை பார்த்து நாகப் பிள்ளை மனம் நொந்து போனான் இந்த நிலையில் பணத்தை எப்படியாவது வசூல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஊர்க்காரர்கள் நாகப்பிள்ளை வீட்டின் எதிரே நின்று கொண்டிருந்தன. நாகப்பிள்ளை என் வீட்டில் ஒண்ணுமில்லை பணத்தை எப்படியாவது தருகிறேன் என்றான். ஆனால் யாரும் கேட்கவில்லை.

**“இப்போ என்னைக் கட்டிப்போட்டு உதைச் சாக்கூட இங்கே கேக்க நாதியிருக்காது... என்கிட்ட காசு இல்ல வூட்ல நொழஞ்சு வேணும்னாலும் பாருங்க”** (சி.எம். முத்துவின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதை, ப. 279)

என நாகப்பிள்ளை ஊர் நாட்டாண்மையிடம் கூறினார்.

வறுமையில் சாப்பாட்டிற்கே வழியில்லாத நிலையில் ஊர்ப் பணத்தை எப்படியாவது கட்டவேண்டும் என்ற இக்கட்டான சூழ் நிலைக்கு தள்ளப்படுகின்றான் என்பதை இப் படைப்பாளர் இக்கதையின் வாயிலாகத் தெரியப்படுத்துகிறார்.

**மானங்காப்பான் மகன்**

பொன்னம்மா மிகவும் வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்க கூடிய வர்க்கத்தைச் சேர்ந்தவர். கணவர் குடிகாரன் அவன் வேளைக்கு சென்றால் தான் சாப்பாடு சாப்பிட முடியும். கூலி வேளைக்கு செல்பவன். இப்படிப்பட்ட கணவரை வைத்துக்கொண்டு குடும்பம் நடத்தி வருகிறாள். அவளுக்கு வாழவே விருப்பமில்லை. இருந்தாலும் தனக்கொரு மகன் இருக்கிறான். அவனுக்காக வாழ வேண்டும் என்று வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

“பறந்து பறந்து பாடுபட்டாலும் படுக்க பாயில்லைக் குறாப்பல கட்ன துணிக்கி மாத்து துணி உண்டா போட்டிருக்கிற ரவுக்கைக்கு வேற ரவுக்கை உண்டா” (சி.எம். முத்துவின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதை, பா. 280)

தான் கட்டியிருக்கிற துணி ஒன்று மட்டும் தான் அவளிடம் உள்ளது தன் சீலையில் தலைப்பை மாற்றி மாற்றி கட்டிக் கொண்டிருக்கிறாள். தன்னுடைய சீலை கிழியாத இடமே இல்லை. அதனை மாத்தி மாத்தி கட்டிக் கொள்கிறாள். இந்த நேரம் பார்த்து அவளுடைய வீட்டிற்கு விருந்தினர்கள் வருகின்றன. அவர்களை சரியாக உபசரிக்க முடியவில்லை. அதற்கு வறுமையே மிக முக்கியமான காரணமாக உள்ளது என்பதை இக்கதையின் வாயிலாக படைப்பாளர் விவரிக்கின்றார்.

**துணைநூற்பட்டியல்**

1. சிம்எம். முத்து, சி.எம். முத்துவின் தேர்ந்தெடுத்த சிறுகதைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், பாவை பிரிண்டர்ஸ், மு.ப. 2021.
2. சோமசுந்தரனார், நல்வழி, உலக ஆராய்ச்சி மையம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-108, மு.ப. 1974.
3. நாமக்கல் கவிஞர், திருக்குறள், உலக ஆராய்ச்சி மையம், சென்னை-14, மு.ப. 1965.
4. பாரதியார், பாரதியார் கவிதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை, ம.ப. 1976.
5. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், முதற்தொகுதி, செந்தமிழ் நிலையம், புதுக்கோட்டை, ம.ப. 1975.
6. சஞ்சீவி, டாக்டர் த., இலக்கிய நூல், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம், சென்னை, மு.ப. 1984.
7. Edwards Tryon D.D., The New Dictionary of Thoughts The Standard Literature Co. Ltd., Calculta, 1951.